செ.வெ.எண்: 35/மார்ச் நாள்: 21.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் மற்றும் உச்சிப்புளி பகுதிகளில்

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் மற்றும் உச்சிப்புளி பகுதிகளில் இன்று (21.03.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை துவக்கி வைத்து பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முதலாவதாக இராமநாதபுரம் செய்யதம்மாள் பொறியியல் கல்லூரி வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2016 வாக்குப்பதிவு நாளான மே 16 குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் விதமாக கல்லூரியைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள், "MAY 16 - 2016" என்ற வாசகம் ஏற்படும் படியாக அணிவகுத்து நின்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தொடர்ந்து மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாணவ, மாணவியர்கள் அனைவரும் வாக்காளர் உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர்.

அதன்பின்பு உச்சிப்புளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் மருத்துவ அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணியினைக் கொடியசைத்து துவக்கி வைத்து பங்கேற்றார். தொடர்ந்து உச்சிப்புளி சந்தை பகுதியில் பொதுமக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டுப்பிரசுரங்களை வழங்கி, நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2016 வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று தவறாமல் வாக்களித்திட வேண்டும் என எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்வுகளில் துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.மீனாட்சி, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன், இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.மாரி உட்பட அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**